**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**O.S.No.272/2024** **நாள்– 04.06.2026**

சாட்சி கி.பாலமுரளி ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு வா.சா. 2 ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் திருமதி.K.சுப்புலட்சுமி, என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கி.பாலமுரளி | தாலுகா | வத்திராயிருப்பு |
| த–பெ | கிருஷ்ணசாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வ.புதுப்பட்டி | வயது | 52 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். என்னுடைய ஆதார் அட்டையின் உண்மை நகல் **வா.சா.ஆ.19**.

**குறுக்குவிசாரணை 1 முதல் 4 எதிர்வாதிகள் தரப்பில்**

பிராது தபசில் சொத்தினை சீனிவாச நாயுடு சுமார் 30 ஆண்டு காலமாக அனுபவித்து வந்த விபரம் எனக்கு தெரியும். தபசில் சொத்திற்கு சம்மந்தமான ஆவணங்கள் உள்ளதா என்பதை நான் பார்க்கவில்லை . ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரக்கையில் மேற்படி சீனிவாச நாயுடு என்பவர் 1ம் வாதியின் கணவர் ரவீந்திரன் என்பவர் பிராது சொத்தை கிரையம் வாங்கியுள்ளதாக நான் சொல்லியுள்ளேன். அந்த சொத்தில் ஒரு பகுதியில் கட்டிடம் கட்டி அதில் வங்கி, ஏடிஎம் ஆகியவைகளுக்கு வாடகைக்கு விட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியும். நான் சொல்வது போல் அந்த இடமானது சீனிவாச நாயுடுக்கு சொந்தமான பாத்தியமான நிலம் அல்ல என்றும் அது வ.புதுப்பட்டி பேரூராட்சிக்கு சொந்தமான அரசு நத்தம் புறம்போக்கு நிலம் என்று சொன்னால் அப்படியில்லை. மேற்படி அரசு புறம்போக்கு நிலத்தை சீனிவாச நாயுடு மேற்படி ரவீந்தரன் என்பவருக்கு 1998 ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்துள்ளதும் தவறானது என்று சொன்னால் அது சரியல்ல. அரசுக்கு சொந்தமான இடத்தில் ஒரு தனி நபர் வியாபார நோக்கத்திற்காக

கட்டிடம் காட்டி அதை வாடகைக்கு விற்றுள்ளது குற்றம் என்று சொன்னால் அப்படியில்லை. எனக்கு இவ்வழக்கின் முழுவிபரம் தெரியாமல் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலம் என்றும் அதற்கான ஆவணங்கள் உள்ளது என்றும் சொன்னால் அது சரியல்ல.

**குறுக்குவிசாரணை 5 எதிர்வாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜரில்லை. 5ம் எதிர்வாதி அழைத்தும் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 04th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.